அழைக்கலாம் என்ற உணர்வோடு அந்த ஊர் மக்களையெல்லாம் உங்களோடு சேர்ந்து வாழ்த்துகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரத் தட்டுப்பாடு பற்றித்தானே கொடுத்திருக்கிறீர்கள்? இன்றைக்குக் காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: 28 ஆம் தேதியே கொடுத்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் இருக்கிறது. நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நாளைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்.

(இ) வேலூர் கோட்டை மசூதியில் தொழுகை நடத்த அனுமதித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்ன?

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகளுக்கு முன்னால் வேலூரில் கட்டப்பட்டிருக்கிற கோட்டைக்குள்ளே இராணுவத்தினர் இருந்த காலத்திலேயே அங்கே இந்துக் கோயிலும் இருந்திருக்கிறது; சர்ச்சும் இருந்திருக்கிறது; மசூதியும் இருந்திருக்கிறது. சர்ச்சில் தொடர்ந்து மக்கள் வழிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டிருக்கக்கூடிய எழுச்சி காரணமாக இந்துக்களும் ஜலகண்டேஸ்வரர் கோயிலைத் திறந்து வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

2008 மே 6] [திரு. சி. ஞானசேகரன்]

· வேலூர் கோட்டைக்குள் தொடர்ந்து பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கக்கூடிய மசூதி திறக்கப்பட வழிவகை செய்ய வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி அங்கு இருக்கக்கூடிய முஸ்லிம் மதத்தைச் சார்ந்திருக்கிற முகமதிய நண்பர்கள் அத்தனை பேரும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். அதனால் காவல் துறையினரும் இப்பொழுது கோட்டையைச் சுற்றி நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் சமூக நல்லிணக்கத்தைப் பற்றி நிறையவே இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய வேலூர் எப்பொழுதுமே மும்மதங்களும், அது இந்துக்களாக இருந்தாலும் சரி, கிறித்தவர்களாக இருந்தாலும் சரி, முகம்மதியர்களாக இருந்தாலும் சரி, மத நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டான ஒரு நகரமாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் மும்மதத்தினருடைய கோயில்களும் அந்தக் கோட்டைக்குள்ளே அந்தக் காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இடத்தில் இந்துக்களும், கிறித்தவர்களும் வழிபட்டுக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில் முகமதியர்களையும் அந்த மசூதிக்குள் தொழுகை நடத்த அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையெல்லாம் வரக்கூடிய ஒரு சூழல் இருந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தி, சமூக நல்லிணக்கத்தை அந்த இடத்தில் நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டை, கோயில் இவையெல்லாம் மாநில அரசின் ஆதிக்கத்திலே இல்லை. மத்திய அரசின் ஆதிக்கத்திலே இருக்கின்றன. பராமரிப்பிலே இருக்கின்றன. ஒரு கல்லை பெயர்க்க வேண்டுமென்றாலும்கூட மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பெயர்க்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் எங்களை அணுகுவதைவிட டெல்லியை அணுகுவது சிறந்தது. (குறுக்கீடு)